## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXV BNSS)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT*
## *Mannargudi*
## *CC.No. 133/2017 – P.W. 7 (LW9)*

| | |
|---|---|
| *Name* | அப்துல் கவி உதவி மருத்துவர்<br>அரசு மருத்துவமனை, கும்பகோணம் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 50 |

*1,4 வது* **எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது அரசு மருத்துவமனை, கும்பகோணத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 12.03.2017ம் தேதியன்று அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மன்னார்குடியில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது அன்று காலை 09.10 மணியளவில் பார்த்தீபன் என்பவர் தானாக என்னிடம் சிகிச்சைக்கு வந்தவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். காயம் குறித்து விசாரித்தபோது அவர் தன்னை 4 தெரிந்த நபர்கள் அரிவாளால் அன்று காலை 08.00 மணியளவில் மேலவாசல் என்னும் இடத்தில் வைத்து தாக்கியதாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) கிழந்த மற்றும் வெட்டி உண்டாக்கப்பட்ட வலது நாலாவது விரல் 4X2X1 cm அளவில் இருந்தது.

2) கிழிந்த காயம் இடது தொடையில் 3X1X1 cm அளவில் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக அன்றைதினம் தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். **பார்த்தீபன் என்பவருடைய விபத்து பதிவேடு அசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மேலும், அன்றையதினமே அன்று காலை 09.15 மணியளவில் செல்வராஜன் என்பவர் தானாக என்னிடம் சிகிச்சைக்கு வந்தவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். காயம் குறித்து விசாரித்தபோது அவர் தன்னை 4 தெரிந்த நபர்கள் அரிவாளால் அன்று காலை 08.00 மணியளவில் மேலவாசல் என்னும் இடத்தில் வைத்து தாக்கியதாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) கிழந்த காயம் இடது மோதிர விரலில் 2X1X1cm அளவில் இருந்தது.

2) வீக்கத்துடன் கூடிய வலி இடது புஜ பகுதியில் 6X3 cm அளவில் இருந்தது.

3) கிழிந்த காயம் இடது கம்கட்டி (Axillari region) 2X2X1cm அளவில் இருந்து.

அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக அன்றைதினம் தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். செல்வராஜன் **என்பவருடைய விபத்து பதிவேடு அசா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மேலும், அன்றையதினமே அன்று காலை 09.20 மணியளவில் அன்பு என்பவரை அவரது அப்பா செல்வராஜ் என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். காயம் குறித்து விசாரித்தபோது அவர் தன்னை 4 தெரிந்த நபர்கள் அரிவாளால் அன்று காலை 08.00 மணியளவில் மேலவாசல் என்னும் இடத்தில் வைத்து தாக்கியதாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) கிழந்த ஆழமான காயம் வலது நெஞ்சு பகுதியில் இருந்தது. 2X1cm அளவில் இருந்தது. ஆழம் 1cm க்கு கூடுதலாக இருந்தது.

2) கிழிந்த காயம் வலது தோள்பட்டையில் 5X1X1cm அளவில் இருந்தது.

அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக அன்றைதினம் தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். அன்பு **என்பவருடைய விபத்து பதிவேடு அசா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மூன்று விபத்து பதிவேட்டிலுமே அரிவாளால் தாக்கியதாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கையாலோ, காலாலோ தாக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை. சொல்லியிருந்தால் எழுதியிருப்பேன் என்றால் சரிதான். இரண்டு பக்கமும் விளிம்புகள் சீராக இருப்பதை வெட்டுக்காயம் என்று குறிப்பிடுவோம் என்றால் சரிதான். விளிம்புகள் சீராக இல்லாமல் காயங்கள் ஒழுங்கற்று இருந்தால் அதனை கிழிந்த காயம் என்று குறிப்பிடுவோம். punture

wound என்றால் குத்துக்காயம் என்றால் சரிதான். அன்புக்கு எழுதியிருந்த விபத்து பதிவேட்டில் முதல் காயத்தை குத்துக்காயம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது குத்துக்காயமாக கூட இருக்கலாம். விபத்து பதிவேட்டில் பதிவு செய்யும் வரை மேற்படி காயம் குத்துகாயமா? அல்லது கிழிந்த காயமா? என்று முடிவுக்கு வரவில்லை என்றால் ஆமாம்.

குத்துக்காயம் என்பது அரிவாளை அன்றி வேறு கூர்மையான ஆயுதங்களால் ஏற்படலாம் என்றால் சரிதான். காயத்தில் இரத்தம் உறைதலையோ, ஒழுகலையோ இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு சொல்லவேண்டும் என்று அவசியம் இல்லை. இரத்தம் சுமாராக எத்தனை நிமிடங்களில் உறையும் என்றால் 4 முதல் 8 நிமிடங்களில் உறைந்து விடும். செல்வராஜனுக்கும், பார்த்தீபனுக்கும் கை விரல்களில் காயம் என்றால் சரிதான். நீளமான அரிவாளால் வெட்டும் போது வெட்டுகிற விதத்தை பொறுத்து நான்காவது விரலை தவிர மற்ற விரல்களிலும் காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். செல்வராஜனுக்கு இடது மோதிர விரலில் காயம். நீளமான அரிவாளால் வெட்டும் போது வெட்டுகிற விதத்தை பொறுத்து இடது கையில் மோதிர விரலை தவிர மற்ற விரல்களிலும் காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

அரிவாளை பிடுங்கும்போது தடுக்க முயற்சியில் கூட மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். காயங்கள் அனைத்தும் மூன்று நபர்களுக்கும் சொன்ன நேரத்திற்கு முன்போ, பின்போ ஏற்பட்டியிருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.